**Saidai Sa. Duraisamy's**

**Manidhanaeyam Free IAS Academy**
**(Run by Manidha Naeyam Charitable Trust)**
**28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)**
**A-Block Old No.A9 New No. A 41, 6th Street,**
**Anna Nagar East, Chennai – 600 102**
**E Mail Address : anmanidhanaeyam@gmail.com**
**Website : saidais.com**

*Booklet Series* **A** Register Number

# GROUP – 2A

## SAMACHEER BOOKS: 11th & 12th Tamil
## &
## CURRENT AFFAIRS – MAY - 2017

**[Time Allowed : 2 Hours]** **TEST- 10** **[Maximum Marks: 125]**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover (this page) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the question.
2. This Question Booklet contains 125 questions.
3. Answer **all** questions. **All** Questions carry equal marks.
4. The Test Booklet is printed in **'A'** series booklet, he/she has to indicate in the side 2 of the Answer Sheet with Blue or Black Ink Ball point pen as follows:

   A [A] [B] [C] [D]

5. You must write your Register Number in the space provide on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An Answer Sheet will be supplied to you separately by the invigilator to mark the answers. You must write your Name, Register No. and other particulars on side 1 of the Answer Sheet provided, failing which your Answer sheet will not be evaluated.
7. You will also encode your Register Number, Subject Code etc., with Blue or Black Ink Ball Point Pen in the space provided on the side 1 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information. Your Answer Sheet will not be evaluated.
8. Each question comprises *four* response [A], [B], [C] and [D]. You have to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the *Answer Sheet.*
9. In the Answer Sheet there are **four** brackets [A], [B],[C] and [D] against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE bracket of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark it in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. E.g. If for any item, [A] is the correct answer, you have to mark as follows:

   [A] [B] [C] [D]

10. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the invigilator. You are allowed to take the Question Booklet with you one after the Examination is over.
11. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
12. In all matters and in cases of doubt, the English Version is final.
13. Do not tick-mark or mark the answer in the Question Booklet.

**Saidai Sa. Duraisamy's**
**Manidhanaeyam Free IAS Academy**
**(Run by Manidha Naeyam Charitable Trust)**
**28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)**
**A-Block Old No.A9 New No. A 41, 6th Street,**
**Anna Nagar East, Chennai – 600 102**
**E Mail Address : anmanidhanaeyam@gmail.com**
**Website : saidais.com**

வினாத்தாள் வரிசை **A** பதிவு எண்

# குரூப்- 2A

## சமச்சீர் புத்தகம்: 11ம் மற்றும் 12ம் வகுப்பு – தமிழ் மற்றும் நடப்பு நிகழ்வுகள்: மே - 2017

## தேர்வு-10

[ அனுமதிக்கபட்டுள்ள நேரம்: 2மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 125]

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்ணகாணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு 125 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை
4. வினாத் தொகுப்பு **A** என்ற ஒரு வரிசையில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்த பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்ம். உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர் **A** என்னும் வினாத் தொகுப்பு பெற்றிறுந்தால அவர்அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும்.

| A | [A] | [B] | [C] | [D] |
|---|---|---|---|---|

5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும் வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்: தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில், ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதை கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக் நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்கவேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். ஊதாரணமாக நீங்கள் என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக்காட்ட வேண்டும்.

   [A] [B] [C] [D]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துக் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
12. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
13. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
14. வினாத் தொகுப்பினல் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது

1. **"தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம்; கூடில்லா பறவை" என்று பாடியவர் யார்?**
(A) பாரதிதாசன் (B) இரசூல் கம்சதேவ் (C) பாரதியார் (D)காளிதாசர்

2. **"பழமை பழமை யென்று**
**பாவனை பேச லன்றிப்**
**பழமையிலிருந்த நிலை – கிளியே**
**பாமரர் ஏதறிவார்" என்ற பாடல் யார் பாடினார்?**
(A) பாரதியார் (B) பாரதிதாசன் (C) வாணிதாசன் (D) சுரதா

3. **கீழ்க்காணும் நூல்களில் தாராபாரதியால் எழுதப்படாத நூல் எது?**
(A) கரைகளே நதியாவதில்லை
(B) இன்னொரு சிகரம்
(C) புதிய விடியல்
(D) பூமியை திறக்கும் பொன்சாவி

4. **கீழ்காண்பவனவற்றுள் எந்த நூல் முடியரசன் கவிதை நூலில் இல்லாதது?**
(A) பூங்கொடி (B) இயேசு காவியம் (C) காவியப் பாவை (D) வீரகாவியம்

5. **பொருத்துக**

| | |
|---|---|
| (a) இளங்கோவடிகள் | 1. மணிமேகலை |
| (b) திருத்தக்கதேவர் | 2. சிலப்பதிகாரம் |
| (c) நாதகுத்தனார் | 3. சீவகசிந்தாமணி |
| (d) சீத்தலைச் சாத்தனார் | 4. வளையாபதி |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

6. **வரி என்பது _______________ வகையது**
(A) சந்தப்பாடல் (B) இசைப்பாடல் (C) கலிப்பாடல் (D) நாடகம்

7. **பொருத்துக**

| | |
|---|---|
| (a) அசனி | 1. சூரியன் |
| (b) மருங்கு | 2. மருமகள் |
| (c) மருகி | 3. இடி |
| (d) மாலி | 4. இடுப்பு |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

8. **தவறானதைத் தேர்ந்தெடு**
(A) பேதை – 5 வயது முதல் 7 வயது வரை
(B) பெதும்பை – 8 வயது முதல் 11 வயது வரை
(C) அரிவை - 14 வயது முதல் 19 வயது வரை
(D) தெரிவை - 26 வயது முதல் 32 வயது வரை

*9.* பொருத்துக

| அறநூல்கள் | ஆசிரியர் |
|---|---|
| (a) அறநெறிச்சாரம் | 1. துரை மங்கலம் சிவப்பிரகாசம் |
| (b) நீதிநூல் | 2. முத்து ராமலிங்க சேதுபதி |
| (c) நீதிவெண்பா | 3. முனைப்பாடியார் |
| (d) நன்னெறி | 4. மாயூரம் வேதநாயகம் பிள்ளை |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 3 | 4 | 2 |

*10.* **தமிழ்நாட்டின் மாப்பஸான் எனப் போற்றப்படுவர் யார்?**
(A) ந. பிச்சமூர்த்தி (B) கு.ப. ராசகோபாலன்
(C) புதுமைப்பித்தன் (D) வல்லிக்கண்ணன்

*11.* **அகல் விளக்கு - என்ற நூலை இயற்றியவர் யார்?**
(A) திரு.வி.க. (B) மு. வரதசாசன் (C)அகிலன் (D) கண்ணதாசன்

*12.* **புலரி – என்ற நூலை இயற்றியவர் யார்?**
(A) தேவதேவன் (B) கல்யாண்ஜி (C) பசுவய்யா (D) புவியரசு

*13.* **கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.**
I. அங்கங்கனையும் காட்சிகளை அமைத்து எழுதுவது இசை மரபு.
II. கோடக நல்லூர் சுந்தர சுவாமிகள் என்பவரைத் தமது ஞானாசிரியராகக் கொண்டு ஒழுகி வந்தார் பெ. சுந்தரம்பிள்ளை.
III. பாரதிதாசனின் வாசக கவிதைகள் வாலட்விட்மன் கலீப் கிப்ரான் முதலிய கவிஞர்களின் கவிதைகளோடு ஒப்பிடத் தக்கவை
IV. தூது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

(A) I, III & II (B) I, II & III (C) II & IV (D) அனைத்தும் சரி

*14.* **ஆற்று வெள்ளம் நாளைவரத் தோற்றுதே குறி –**
**மலையாள மின்னல் ஈழமின்னல் குழ மின்னிதே – என்ற பாடல் வரி இடம் பெற்றநூல் எது?**
(A) முக்கூடற்பள்ளு (B) தேவாரம்
(C) குற்றாலக் குறவஞ்சி (D) பெத்தலகேம் குறவஞ்சி

*15.* **மெய்வைத்த செல்வமெங்கே மண்ட லீகர்தம் மேடை யெங்கே**
**கைவைத்த நாடக சாலை யெங்கே யிதுகண்மயக்கே – என்ற பாடலை பாடியவர் யார்?**
(A) கம்பர் (B) ஔவை
(C) பட்டினத்துப் பிள்ளை (D) காரைக் காலம்மையார்

*16.* **கீழ்காண்பவனவற்றுள் தவறாக பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு**
(A) புலரி – கல்யாண்ஜி (B) சுயம்வரம் - கலாப்ரியா
(C) யாரோ ஒருவனுக்கு – தேவதேவன் (D) தேன்மழை - சுரதா

**17. அகர வரிசையில் அமைந்ததைத் தேர்க்**
(A) குதிரை, பன்றி, சிங்கம், முயல், முடி
(B) குதிரை, சிங்கம், பன்றி, முயல், முடி
(C) சிங்கம், குதிை, பன்றி, முயல், முடி
(D) குதிரை, சிங்கம், பன்றி, முடி, முயல்

**18. எது சரியான எதிர்ச்சொல் இணை**
**"குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்"**
(A) மிகை x குறை
(B) குற்றம் x நாடி
(C) குணம் x குற்றம்
(D) மிக்க x கொளல்

**19. சரியான பிரித்தறிதலைக் கண்டறிக:**
(A) கருங்கடல் = கரிய+கடல்
(B) சேவடி = செம்மை+அடி
(C) பெருங்களிறு = பெரிய+களிறு
(D) செழும்பொன் = செம்மை+பொன்

**20. பொருந்தா இணையைக் கண்டறிக**
(A) மனப்பால் குடித்தல் - கற்பனை செய்தல்
(B) மதில்மேல் பூனை - நிச்சயம் இல்லாமை
(C) தாளம் போடுகிறாள் - மத்தளம் தட்டுதல்
(D) கங்கு கரையில்லை - எல்லையில்லை

**21. முக்கூடற்பள்ளுக்குரிய பாவகை**
(A) ஆசிரியப்பா (B) சிந்துப்பா (C) வஞ்சிப்பா (D) இன்னிசை வெண்பா

**22. தேம்பாவணி நூலின் பாட்டுடைத் தலைவர் யார்?**
(A) சூசைமாமுனிவர்
(B) இயேசு பெருமான்
(C) தாவீதன்
(D) கோலியாத்து

**23. சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றி - என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது?**
(A) புறப்பொருள் வெண்பாமாலை
(B) தொல்காப்பியம்
(C) மதுரைக் கலம்பகம்
(D) திருவேங்கடந்தாதி

**24. பொருத்துக**
(a) இராச ராச சோழனுலா - 1. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
(b) திருவேங்கடத்தந்தாதி - 2. குமரகுருபரர்
(c) மதுரைக் கலம்பகம் - 3. ஆசிரியர் பெயர் தெரியவில்லை
(d) முக்கூடற்பள்ளு - 4. ஒட்டக்கூத்தர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

**25. "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல்**
**இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்" – என்பது யார் கூற்று?**
(A) இராமலிங்கம் (B) பாரதியார் (C) பாரதிதாசன் (D) வாணிதாசன்

**26. வாக்கிய அமைப்பினைக் கண்டறிக:**
**நேற்று எங்கள் பள்ளியில் ஆண்டுவிழா நடைபெற்றது.**
(A) வினா வாக்கியம் (B) செய்தி வாக்கியம்
(C) பிறவினை வாக்கியம் (D) உணர்ச்சி வாக்கியம்

**27. பாராங்கல் மீதில் விழும் மழைநீர் போலப்**
**பளிச்சென்று துன்பமெலாம் சிதறிப் போகும் - என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் எது?**
(A) காடு (B) புத்தகசாலை (C) சிக்கனம் (D) மனிதநேயம்

**28. பின்வருவனவற்றுள் "தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்" என்னும் விதியில் படி புணராதது எது?**
(A) தன்னுயிர் (B) பெண்ணரசு (C) பைந்தமிழ் (D) என்னருமை

**29. பின்வரும் இலக்கணங்களுள் தவறானது எது?**
(A) இகழ்வார் - வினையாலணையும் பெயர்
(B) செந்நீர் - வினைத் தொகை
(C) இன்னாச்சொல் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
(D) உண்ணாது - வினையெச்சம்

**30. "வாழ்வினிற் செம்மைச் செய்பவன் நீயே" என்ற பாடலைப் பாடியவர் யார்?**
(A) பாரதியார் (B) பாரதிதாசன் (C) வாணிதாசன் (D) மு.வ.

**31. பொருத்துக**
(a) புத்தக சாலை 1. சுரதா
(b) தீக்குச்சி 2. வாணிதாசன்
(c) சிக்கனம் 3. பாரதிதாசன்
(d) காடு 4. அப்துல் ரகுமான்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

**32. தவறாக பொருந்தியுள்ளதைத் தேர்ந்தெடு**
(A) குயில்பாட்டு – பாரதியார் (B) அழகின்சிரிப்பு – பாரதிதாசன்
(C) துறைமுகம் - சுரதா (D) பால்வீதி - தாரபாரதி

**33. பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரால் செவாலியர் விருதினைப் பெற்றவர்**
(A) பாரதியார் (B) பாரதிதாசன் (C) வாணிதாசன் (D) முடியரசன்

**34. பித்தர் சொன்னவும் பேதையார் சொன்னவும்**
**பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ? - இப்பாடலை யார் பாடியது?**
(A) ஔவையார் (B) கம்பர் (C) ஒட்டக்கூத்தர் (D) ஓதலாந்தையார்

**35. உவமைக்கு ஏற்ற பொருத்தமான பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
**"கனியிருப்பு காய் விரும்பியது போல"**
(A) அறியாமை (B) அறிவு (C) வெறுப்பு (D) இயல்பு

**36. தொகைளின் எத்தனை வகைப்படும்?**
(A) ஐந்து (B) நான்கு (C) ஏழு (D) ஆறு

**37. சிறை என்பதை குறிக்கும் சொல்**
(A) வேலம் (B) வேளம் (C) வேழம் (D) வோலம்

**38. வாக்கிய அமைப்பினைக் கண்டறிதல்:**
**மாணவர்கள் சீருடையில் பள்ளிக்கு வருக – எவ்வகை வாக்கியம் எனச்சுட்டுக**
(A) கட்டளை வாக்கியம் (B) உடன்பாட்டு வாக்கியம்
(C) உணர்ச்சி வாக்கியம் (D) செய்தி வாக்கியம்

**39. செய்வினைச் சொற்றொடரைக் கண்டறிக**
(A) மாவட்ட ஆட்சியரால் கொடி ஏற்றப்பட்டது
(B) மாவட்ட ஆட்சியர் கொடி ஏற்றினார்.
(C) ஏற்றினார் கொடியை மாவட்ட ஆட்சியாளர்
(D) மாவட்ட ஆட்சியர் கொடியை ஏற்றுவர்

**40. செலீ இய சேறி யாயின் இவளே**
**வருகை யாகிய சின்னாள் - என்ற பாடலை பாடியவர் யார்?**
(A) நக்கண்ணையார் (B) கபிலர் (C) தலாந்தையார் (D) ஔவையார்

**41. உள்ளுதோ நுள்ளுதொ நுள்ளம் உருக்குமே**
**வள்ளுவர் வாய் மொழி மாண்பு – என்று திருக்குறளின் பெருமையை கூறியவர் யார்?**
(A) மாங்குடி மருதனார் (B) பரணர்
(C) கபிலர் (D) தேனிக்குடி கீரனார்

**42. பொருத்துக**
(a) அடிவாழ்த்துவம் — 1. தன்மைப் பன்மை வினைமுற்று
(b) திருந்து மொழி — 2. அடுக்குத் தொடர்
(c) வாழிய வாழிய — 3. இரண்டாம் வேற்றுமைத் தொகை
(d) வாழ்த்துவம் — 4. வினைத் தொகை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**43. நல்லது செய்த லாற்றீ ராயினும்**
**அல்லது செய்த லோம்புமி னதுதான் - என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் எது?**
(A) அகநானூறு (B) நற்றிணை (C) புறநானூறு (D) குறுந்தொகை

**44. அகர வரிசைப்படி சொற்களைச் சீர் செய்க.**
(A) காஞ்சி, காதை, கார், கானல் (B) காதை, காஞ்சி, கானல், கார்
(C) கார், கானல், காஞ்சி, காதை (D) கானல், கார், காதை, காஞ்சி

**45. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்குதல். கீழ்க்கண்டவற்றில் எது சரியானது?**
(A) புலப்படுத்தியுள்ளார் நுட்பமான இசையின் இலக்கணத்தை
(B) இசையின் புலப்படுத்தியுள்ளார் இலக்கணத்தை நுட்பமான

(C) இசையின் நுட்பமான இலக்கணத்தைப் புலப்படுத்தியுள்ளார்.
(D) நுட்பான இசையின் புலப்படுத்தி உள்ளார் இலக்கணத்தை

**46. ‘மேனி’ என்ற பெயர்ச் சொல்லின் வகை அறிக**
(A) இடப்பெயர் (B) குணப்பெயர் (C) பொருட்பெயர் (D) காலப்பெயர்

**47. பின்வருவனவற்றில் பண்புத்தொகை அல்லாத சொல் எது?**
(A) பச்சூன் (B) அஞ்சிலோதி (C) வெஞ்சினம் (D) பைந்நிணம்

**48. விடைக்கேற்ற வினாவைத் தேர்க”**
**“கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ்”**
(A) கூடல் நகரம் எங்குள்ளது?
(B) கூடல் மாநகரின் சிறப்பு என்ன?
(C) தமிழனால் ஏற்பட்டுள்ள பயனைக் கூறு
(D) தமிழாய்வு எங்கு நடைபெற்றது?

**49. “எரிந்தி லங்கு சடைமுடி முனிவர்**
**புரிந்து கண்ட பொருள்மொழிந் தன்று” –என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது?**
(A) புறநானூறு (B) குறுந்தொகை
(C) புறப்பொருள் வெண்பாமாலை (D) அகநானூறு

**50. கபிலரை “நல்லிசைக் கபிலன்” என்று கூறியவர் யார்?**
(A) இளங்கீரனார் (B) மாறோக்கத்து நப்பசலையார்
(C) பெருங்குன்றூர்க் கிழார் (D) நக்கீரர்

**51. “வானுற நிவந்த மேனிலை மருங்கு” என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் எது?**
(A) நெடுநல்வாடை (B) தேவாரம் (C) திருப்புகழ் (D) கலிங்கத்துப் பரணி

**52. நீதித்திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்**
**ஓதித்தொழுது எழுக ஓர்ந்து – என்று பாடியவர் யார்?**
(A) கவிமணி (B) பரணர் (C) கபிலர் (D) தேனிக்குடி கீரனர்

**53. ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க**

| | அருகு | அறுகு |
|---|---|---|
| (A) | ஒருவகைப் புல் | சேர் |
| (B) | பக்கம் | ஒரு வகைப்புல் |
| (C) | சேர்த்தல் | ஒரு வகைப்புல் |
| (D) | செடி | மரம் |

**54. கீழ்க்காணும் விடைகளில் எது சரியானது?**
(A) கோ – குகன் (B) சோ – மகள் (C) சே – எருது (D) தா - விடை

**55. வேர்ச்சொல்லைத் தெரிவு செய்க: வாடினான்**
(A) வா (B) வாடிய (C) வாடு (D) வாடுக

**56. “பயில் - என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்றைக் காண்க.**
(A) பயின்ற (B) பயின்று (C) பயிலல் (D) பயின்றான்

**57. ஆள் - என்னும் வேர்ச்சொல்லின் வியங்கோள் வினைமுற்றை எழுதுக.**
(A) ஆண்டு (B) ஆண்ட (C) ஆள்க (D) ஆளல்

**58. "முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்" - இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?**
(A) நற்றிணை (B) புறநாநூறு (C) குறுந்தொகை (D) மணிமேகலை

**59. "பகடு நடத்த கூழ்" – என்ற பாடல் இடம் பெற்ற நூல்**
(A) நற்றிணை (B) நாலடியார் (C) கலித்தொகை (D) குறுந்தொகை

**60. தவறாக பொருந்தியுள்ளதை தேர்ந்தெடு**
(A) திருவரங்கம் - ஸ்ரீரங்கம் (B) திருச்சிறம்பலம் - சிதம்பரம்
(C) வளர்நெடுங் கண்ணி – சொர்ணபுரீச்சுரர் (D) பழமலை நாதர் - விருத்தகிரீச்சுரர்

**61. தவறானதைத் தேர்ந்தெடு**
(A) வாலை - இளம் பெண் (B) வாழை - மரவகை
(C) வழை – சுரபுன்னை மரம் (D) வளை – மீன்பிடி வலை

**62. தவறானதைத் தேர்ந்தெடு**
(A) அழை - கூப்பிடு (B) அளை - பிசை
(C) இழை – மரம் (D) இளை – மெயிந்து போதல்

**63. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் எது?**
(A) புறநானூறு (B) ஐங்குநூறு (C) அகநானூறு (D) கலித்தொகை

**64. நற்றிணைப் பாக்களின் அடி வரையறை கூறு?**
(A) *4* அடி முதல் *8* அடி வரை (B) *9* அடி முதல் *12* அடி வரை
(C) *13* அடி முதல் *31* அடி வரை (D) *3* அடி முதல் *6* அடி வரை

**65. உதவி வரைந்தன் றுதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி எது?**
(A) சொற்பொருட்பின்வரு நிலையணி (B) உவமையணி
(C) எடுத்துகாட்டு உவமையணி (D) வேற்று பொருள் வைப்பணி

**66. பண்புப் பெயர்ப்புணர்ச்சி அடையாத சொல்லை தேர்ந்தெடு**
(A) நற்பயன் (B) பழந்தமிழ் (C) சிறியன் (D) கருத்ததனுள்

**67. ஏவல் பன்மை வினைமுற்ற விகுதியை தேர்ந்தெடு**
(A) மின் (B) இ (C) த், ட், ற், இன் (D) இர், ஈர்

**68. "பிறர் அன்பு பாராட்டாமலும் பிறர் அன்புக்குப் பாத்திரமாகாமலும் இருப்பவனிடம் நற்குணங்கள் இரா" என்பது யார் கூறினார்?**
(A) முகமது சாகேபி (B) கன்பூஷியஸ்
(C) அர்ச் ∴பிரான்ஸிஸ் (D) விஸ்டன்

**69. பாட்டாளி ஓய்வு பெறுவது, சமூக நீதியில் ஒன்று – என்று கூறியவர்**
(A) மு.வ. (B) காமராஜர் (C) பேரறிஞர்அண்ணா (D) திரு.வி.க

**70. "கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்" எனக் கூறியவர் யார்?**

(A) கபிலர் (B) ஔவையார் (C) இடைக்காடனார் (D) பரணர்

**71. "தினைப்புனைங்காத்த கன்னியொருத்தி தன் இன்னிசையால் மதகரியையும் மயங்கி உயங்கச் செய்தாள்", என்ற செய்தி இடம் பெற்ற நூல் எது?**

(A) புறநானூறு (B) நெடுநல்வாடை
(C) அகநானூறு (D) மலைபடுகடாம்

**72. "அணிமயிற் பீலி சூட்டிப் பெயர் பொறித்**
**தினிநட் டனரே கல்லும்" என்னும் பாடல் இடம் பெற்ற நூல்**

(A) புறநானூறு (B) அகநானூறு
(C) மலைபடுகடாம் (D) நெடுநல்வாடை

**73. பொருத்துக**

(a) பாலை — *1. 6, 16 என வருவன*
(b) குறிஞ்சி — *2. 4, 14 என வருவன*
(c) முல்லை — *3. 2, 8 என வருவன*
(d) மருதம் — *4. 1, 3, 5 என ஒற்றைப்படை*

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**74. ஒருமையுள்ள ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து**

(A) தொழிலுவமையணி (B) வேற்றுமையணி
(C) எடுத்துகாட்டுவுமையணி (D) உவமையணி

**75. "பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை அத்தனையும் படைப்பாய் இந்நாய்! தொண்டு செய்வாய் தமிழுக்குத் துறைதோறுந் துடித்தெழுந்தே" – என்று கூறியவர்**

(A) பாரதிதாசன் (B) பாரதியார் (C) முடியரசன் (D) மு.வ.

**76. தமஸ்கிரே என்பவர் எழுதிய ஆங்கிலக் கவிதை ஒன்றைத் தமிழில் செய்யுள் வடிவில் "இரங்கற்பா" என்னும் தலைப்பின் கீழ் மொழி பெயர்த்தவர் யார்?**

(A) வேதநாயக சாத்திரியர் (B) முடியரசன்
(C) கந்தசாமிப் புலவர் (D) பாலசுப்பிரமணியன்

**77. பாரதியார் எந்த பத்திரிக்கைக்கு உதவி ஆசிரியராக பணியாற்றினார்**

(A) சக்கரவர்த்தினி (B) குயில் (C) சுதேசமித்திரன் (D) இந்தியா

**78. "இன்பத் தமிழ்க் கல்வி யாவரும் கற்றவர் என்றுரைக்கும் நிலை எய்தி விட்டால் துன்பங்கள் நீங்கும் சுகம் வரும் நெஞ்சினில் தூய்மை உண்டாகிவிடும் வீரம் வரும்" –என்று தமிழர்க்காக எழுதியவர் யார்?**

(A) முடியரசன் (B) பாரதியார்
(C) பாலசுப்பிரமணியன் (D) பாரதிதாசன்

**79. பொருத்துக**

(a) நறை — 1. பல்
(b) உரகம் — 2. குதிரை
(c) இவுளி — 3. பாம்பு
(d) எயிறு — 4. தேன்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**80. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு – என்ற குறளில் வந்துள்ள அணி எது?**
(A) உவமையணி (B) வேற்றுமையணி
(C) தொழிலுவமையணி (D) எடுத்துக்காட்டுவுமையணி

**81. ஐங்குநுறூறு பாடல்களில் இடம்பெற்ற திணைகளில் தவறாகப் பொருத்தப்பட்டதைத் தேர்ந்தெடு**
(A) முல்லை – பேயனார் (B) பாலை – ஓதலாந்தையார்
(C) குறிஞ்சி – கபிலர் (D) மருதம் - அம்மூவனார்

**82. "காலே பரிதப்பினவே கண்ணே, நோக்கி நோக்கி வாளிழந்தனவே" என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது?**
(A) புறநானூறு (B) நற்றிணை (C) குறுந்தொகை (D) அகநானூறு

**83. பொருள் தெரியாத ஒலியைக் குழந்தை எழுப்பும் பருவத்தைக் குறிப்பிடுக?**
(A) சப்பாணி (B) காப்பு (C) செங்கீரை (D) ஊசல்

**84. அறுகுளத் துகத்து மகல்வயற் பொழிந்தும்**
**உறுமிடத் துதவா துவர்நில மூட்டியும் - என்ற பாடலை பாடியவர் யார்?**
(A) கபிலர் (B) பரணர் (C) ஔவையார் (D) வெள்ளிவீதியார்

**85. கொல்வேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும் புல்லாளே ஆயமகள் - என்ற பாடல் இடம் பெற்ற நூல் எது?**
(A) நற்றிணை (B) கலித்தொகை (C) பதிற்றுப்பத்து (D) பரிபாடல்

**86. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு**
I. ஒட்டக் கூத்தர் கலிங்கத்துப்பரணியைத் "தென்தமிழ் தெய்வப்பரணி" என்று சிறப்பித்துள்ளார்.
II. தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநா ஐயர் சயங்கொண்டாரை பரணிக்கோர் சயங்கொண்டான் எனப் புகழ்ந்துப் பாடியுள்ளார்.
III. சயங்கொண்டார், மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தார்.
IV. ஒரிசா மாநிலம் பண்டு கலிங்கம் என்று வழங்கப்பட்டது.
(A) I, II & III (B) I, II & IV (C) I & IV (D) அனைத்தும் சரி

**87. பொருந்தாத இணையைக் கண்டறிக**
(A) புவி – ஞாலம் (B) இகல் - பகை (C) விரை – தரை (D)அல் - இருள்

**88. தமிழில் தோன்றிய முதல் "உலா" எது?**
(A) மூவருலா (B) திருக்கயிலாய ஞான உலா
(C) திருவாரூர் உலா (D) திருவானைக்கா உலா

**89. 'தமிழ் வியாசர்' என வழங்கப்படும் சான்றோர் யார்?**
(A) சேரமான் பெருமாள் நாயனார் (B) நாற்கவிராச நம்பி
(C) சேந்தனார் (D) நம்பியாண்டார் நம்பி

**90. "முக்தி நூல்" என அடைமொழி கொண்ட நூல் எது?**
(A) மணிமேகலை (B) குண்டலகேசி
(C) சீவகசிந்தாமணி (D) வளையாபதி

**91. பிரித்தெழுதுக: இன்னரும் பொழில்**
(A) இன்னருமை + பொழில் (B) இனிமை + அருமை + பொழில்
(C) இனிமை + அரும்பொழில் (D) இனிமை + அரும் + பொழில்

**92. பொருந்தாதச் சொல்லைக் கண்டறி**
(A) கயல் (B) இயல் (C) துயில் (D) பயில்

**93. கொல்லை – என்ற நிலப்பகுதி எந்த திணை ஆகும்?**
(A) குறிஞ்சி (B) முல்லை (C) மருதம் (D) நெய்தல்

**94. கேளாய்நங் கிளை கிளைக்குங் கேடுபடரத் திறமருளிக் கோளாய நீங்குபவன் கோளிலியெம் பெருமானே – என்ற பாடியவர்**
(A) திருத்தக்கத்தேவர் (B) நம்மாழ்வார் (C) பாரதிதாசன் (D) திருஞானசம்பந்தர்

**95. பொருத்துக**

(a) தண்ணீர் வங்கிகள் — 1. காமராஜன்
(b) கண் — 2. முடியரசன்
(c) தளை — 3. ந. கருணாநிதி
(d) பூக்கட்டும் புதுமை — 4. பாலசுப்பிரமணியம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

**96. தளையில் சிக்கிய கோழை**
**முளையில் கட்டிய காளை! என்று பாடியவர் யார்?**
(A) ந.கருணாநிதி (B) காமராஜன் (C) பாலசுப்பிரமணியன் (D) முடியரசன்

**97. சிற்பி பாலசுப்பிரமணியன் இயற்றாத நூலைத் தெரிவு செய்க.**
(A) ஒளிப்பறவை (B) சூரிய நிழல் (C) சூரிய காந்தி (D) சர்ப்பாயகம்

**98. வேதம் அனைத்திற்கும் வித்து என்று புகழப்படும் நூல் எது?**
(A) தேவாரம் (B) திருப்பாவை (C) திருப்புகழ் (D) புராணங்கள்

*99.* **திருநாவுக்கரசரை குறிப்பிடாத பெயரை தெரிவு செய்க?**
(A) வாகீசர் (B) தம்பிரான் தோழர்
(C) அப்பர் (D) மருள் நீக்கியர்

*100.* **பொருத்துக**
(a) முதல் மூன்று தேவாரத் திருமுறைகள் 1. ஆண்டாள்
(b) 4, 5, 6 ஆம் திருமுறைகள் 2. திருஞானசம்பந்தர்
(c) ஏழாம் திருமுறைகள் 3. திருநாவுக்கரசர்
(d) திருப்பாவை 4. சுந்தரர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 3 | 2 | 4 | 1 |

**101. Which Actress has got the Dada Saheb Phalke award in May 2017?**
(A) Aishwarya Rai (B) Sushmita Sen
(C) Anushka (D) Priyaka Chopra

**எந்த நடிகை மே 2017அல் தாதா சாகேப் பால்கோ விருதை பெற்றுள்ளார்?**
(A) ஐஸ்வர்யா ராய் (B) சுஷ்மிதா ஷென்
(C) அனுஷ்கா (D) பிரியங்கா சோப்ரா

**102. Who has got the sangeet Natak Akademi puraskar award for the year 2016?**
(A) Kumar Venkatachalam (B) Satya Pradha Rawt
(C) Padma Subramaniyam (D) Jeeva Selvarasu

**2016 ஆம் ஆண்டுக்கான சங்கீத நாடக அகதெமி புரஸ்கார் விருது பெற்றுள்ளவர் யார்?**
(A) குமாரி வெங்கடாச்சலம் (B) சத்யபிரதா ராவுத்
(C) பத்மா சுப்ரமிணயம் (D) ஜீவா செல்வராசு

**103. "Siam Bharat" is the airforce exercise which is conducted between India and _____________.**
(A) Thailand (B) Switzerland (C) America (D) Russia

**"Siam Bharat" என்பது இந்தியா மற்றும் _____________ க்கும் இடையில் நடக்கும் விமானப்படைகளின் கூட்டுப்பயிற்சியாகும்.**
(A) தாய்லாந்து (B) சுவிட்சர்லாந்து (C) அமெரிக்கா (D) ரஷ்யா

**104. Financial Literacy week is observed by the Reserve Bank of India ____________ days.**
(A) From May 28 to June 2 (B) From May 29 to June 2
(C) From June 1 to June 7 (D) From June 5 to June 9

**ரிசர்வ் வங்கியினால் "நிதி கல்வியறிவு வாரம்" (Financial Literacy Week) அனுசரிக்கப்படும் நாட்கள் ________________.**

(A) மே 28 முதல் ஜீன் 2 வரை (B) மே 29 முதல் ஜீன் 3 வரை
(C) ஜீன் 1 முதல் ஜீன் 7 வரை (D) ஜீன் 5 முதல் ஜீன் 9 வரை

**105. According to the Asia Pacific Tax Complexity Survey 2017. Which Asian Pacific country has the complex taxation system?**
(A) India (B) Bangladesh (C) China (D) Soudi Arabia

**Asia Pacific Tax Complexity Survey 2017 இன் படி ஆசிய – பசுபிக் நாடுகளில் சிக்கலான வரி விதிப்பு கொண்டுள்ள நாடு எது?**
(A) இந்தியா (B) வங்காளதேசம் (C) சீனா (D) சவுதி அரேபியா

**106. Which Indian city has got the "Smart Police award of 2017" by the association of India Commerce Chamber?**
(A) Chennai (B) Kolkatta (C) Pune (D) New Delhi

**இந்திய வர்த்தக கூட்டமைப்பின் 'ஸ்மார்ட் போலீஸ் விருது 2017" ஐப் பெற்றுள்ள நகரக் காவல்துறை எது?**
(A) சென்னை (B) கல்கத்தா (C) பூனே (D) புது தில்லி

**107. Which Indian has been appointed as the chairman of International Fertilizer Association?**
(A) Rakesh Kapoor (B) Padma Subramaniyam
(C) Sumesh Sinha (D) Rajan Anandan

**சர்வதேச உர சங்கத்தின் (International Fertilizer Association) தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**
(A) ராகேஷ் கபூர் (B) பத்மா சுப்ரமணியம்
(C) சுமேஷ் சின்கா (D) ராஜன் அனந்தன்

**108. Who has been appointed as the head of Internet and Mobile Association of India (IAMAN)?**
(A) Rajan Anandan (B) Kumar Patel
(C) Virendar Singh (D) Sumesh Sinha

**இந்திய இணையதளம் மற்றும் மொபைல் அசோசியேசனின் (Internet and Mobile Association of Indian (IAMAN)) தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**
(A) ராஜன் அனந்தன் (B) குமார் படேல்
(C) விரேந்தர் சிங் (D) சுமேஷ் சின்கா

**109. _______________ is the author of the book "Mann ki Baat: a social revolution on radio".**
(A) Narendra Modi (B) Subramanian Swamy
(C) Sasi Dharur (D) Rajesh Jain
**'Mann Ki Baat: a social revolution on radio" என்ற புத்தகத்தின்ஆசிரியர் __________________.**
(A) நரேந்திர மோடி (B) சுப்ரமணியன் சுவாமி
(C) சசி தரூர் (D) ராஜேஷ் ஜெயின்

**110. In May 2017 Tamil Nadu government has raised the reservation from 3 percentage to __________ for the physically challenged people.**
(A) 4 Percentage (B) 5 Percentage (C) 6 Percentage (D)7Percentage

**மே 2017ல் தமிழக அரசு மாற்றுத் திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டை 3 சதவீதத்திலிருந்து _____________ சதவீதத்திற்கு உயர்த்தியுள்ளது.**
(A) 4 சதவீதம் (B) 5 சதவீதம் (C) 6 சதவீதம் (D) 7 சதவீதம்

**111. What is the new name of Revenue Department of Tamil Nadu?**
(A) Revenue and Disaster Management Department
(B) Revenue and Public Accounts Department
(C) Revenue and Taxes Department
(D) Revenue and Expenditure Department

**தமிழக வருவாய்த்துறையின் புதிய பெயர் என்ன?**
(A) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
(B) வருவாய் மற்றும் பொதுகணக்குத்துறை
(C) வருவாய் மற்றும் வரிகள் துறை
(D) வருவாய் மற்றும் செலவினத்துறை

**112. Who is the Chairman of National Commission for Minorities?**
(A) George Kurian (B) Abdul Hameed
(C) Hasan Riswi (D) Immanuel Chandra Sekaran

**தேசிய சிறுபான்மையினர் கமிஷன் தலைவராக இருப்பவர் யார்?**
(A) ஜார்ஜ் குரியன் (B) அப்துல் ஹமீது
(C) ஹசன் ரிஸ்வி (D) இம்மானுவேல் சந்திரசேகரன்

**113. World No Tobaccor Day is observed on _______________**
(A) May 28 (B) May 29 (C) May 30 (D) May 31

**உலக புகையிலை எதிர்ப்பு தினம் _______________ அன்று அனுசரிக்கப்படுகிறது.**
(A) மே 28 (B) மே 29 (C) மே 30 (D) மே 31

**114. What is the chemical name of "Fire Ice" which was discovered by China?**
(A) Methane Nitrate (B) Methane Hydrate
(C) Methane-di-oxide (D) Ethanol Hydrate

**சீனாவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள "எரியும் பனிக்கட்டி" எனும் புதிய எரிபொருளின் வேதியல் பெயர் என்ன?**
(A) மீத்தேன் நைட்ரேட் (B) மீத்தேன் ஹைட்ரேட்
(C) மீத்தேன் டை ஆக்ஸைடு (D) எத்தனால் ஹைட்ரேட்

**115. Which country was recently affected by the "Mora" Cyclone?**
(A) Nepal (B) Bhutan (C) Bangladesh (D) India

**சமீபத்தில் 'மோரா' புயலால் பெருமளவு பாதிப்பிற்குள்ளாகியுள்ள நாடு எது?**
(A) நேபால் (B) பூடான் (C) வங்காளதேசம் (D) இந்தியா

**116. According to the World Economic Forum's report which city has the highest population density in the world?**
(A) Kota (B) Mumbai (C) New Delhi (D) Dhaka

**உலக பொருளாதார மன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி உலகின் மிகவும் மக்கள் அடர்த்தி மிகுந்த நகரம்?**
(A) கோட்டா (B) மும்பை (C) புதுதில்லி (D) டாக்கா

**117. Which country has permitted the Same-Sex marriage by the law for the first time in Asia?**
(A) Lebanon (B) Taiwan (C) Jordan (D) Thailand

**ஆசியாவிலேயே முதல் முறையாக ஓரினச் சேர்க்கையாளர்கள் சட்டப்படி திருமணம் செய்துகொள்ள அனுமதியளித்துள்ள நாடு எது?**
(A) லெபனான் (B) தைவான் (C) ஜோர்டான் (D) தாய்லாந்து

**118. Central Government's www.khoyapaya.gov.in internet service is related to ______________**
(A) Women Protection (B) Children Protection
(C) Senior Citizen Protection (D) Welfare of Armymen

**மத்திய அரசின் 'கோயா பாயா (www.khoyapaya.gov.in) இணையதள சேவை ___________ உடன் தொடர்புடையது.**
(A) பெண்கள் பாதுகாப்பு (B) குழந்தைகள் பாதுகாப்பு
(C) மூத்த குடிமக்கள் பாதுகாப்பு (D) இராணுவ வீரர் நலன்

**119. 'e-sanad' portal is related to which of the following central government department's scheme?**
(A) Ship Transportation Department
(B) Human Resource Development Department
(C) External Affairs Department
(D) Railway Department

**'e-sanad' போர்ட்டல் பின்வரும் எந்த மத்திய அரசுத் துறையின் திட்டம்?**
(A) கப்பல் போக்குவரத்துத் துறை
(B) மனித வளத்துளை
(C) வெளியுறவுத்துறை
(D) இரயில்வே துறை

**120. ___________ is the International day for Biodiversity**
(A) May 20 (B) May 21 (C) May 22 (D) May 23

**சர்வதேச உயிரினப் பன்முகத்தன்மை தினம் (International Day for Biodiversity) _________________.**
(A) மே 20 (B) மே 21 (C) மே 22 (D) மே 23

**121. Harsh Malhotra Committee is related to ________________.**

(A) Scout (B) National Service Scheme
(C) National Cadet Corps (D) Redcross organization

**ஹர்ஸ் மல்கோத்ரா (Harsh Malhotra) குழு ________________ உடன் தொடர்புடையது.**

(A) சாரணிய இயக்கம் (B) நாட்டு நலப்பணித் திட்டம்
(C) தேசிய மாணவர் படை (D) ரெட்கிராஸ் அமைப்பு

**122. Which Indian Student has got the silver medal in First International Asia-Pacific Yoga Sports Championship which was conducted in Bangkok?**

(A) Anjali George (B) Kamatchi
(C) Kamali Vaithiyanathan (D) Anushya Subramanian

**பாங்காக்கில் நடத்தப்பட்ட முதலாவது ஆசிய பசிபிக் யோகா ஸ்போர்ட்ஸ் சாம்பியன் ஷிப் சர்வதேச போட்டியில் வெள்ளி வென்றுள்ள இந்திய மாணவி?**

(A) அஞ்சலி ஜார்ஜ் (B) காமாட்சி
(C) கமலி வைத்யநாதன் (D) அனுஷ்யா சுப்ரமணியன்

**123. In which language the Tirukkural was translated and published in May 2017?**

(A) Gango (B) Korea (C) Japanese (D) Chinese

**மே 2017ல் எந்த மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் வெளியிடப்பட்டது?**

(A) காங்கோ (B) கொரியா (C) ஜப்பானியம் (D) சீனம்

**124. Which country has got the first place in the steel production at International Level?**

(A) America (B) Russia (C) Germany (D) China

**உருக்கு உற்பத்தியில் சர்வதேச அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ள நாடு எது?**

(A) அமெரிக்கா (B) ரஷ்யா (C) ஜெர்மனி (D) சீனா

**125. The military exercise "Karavali Karunya" is related to ______________.**

(A) Indian Navy (B) Indian Airforce
(C) CRPF (D) CISF

**"காராவாலி காருண்யா" (Karavali Karunya) எனும் இராணுவ பயிற்சி ___________ உடன் தொடர்புடையது.**

(A) இந்திய கடற்படை (B) இந்திய விமானப்படை
(C) சி.ஆர்.பி.எ்.ப் (D) சி.ஐ.எஸ்.எ்.ப்